செ.வெ.எண். 19/ஜூன் தேதி : 07.06.2016

**பத்திரிக்கைச் செய்தி**

**முதலமைச்சர் மாநில இளைஞர் விருது பெற விண்ணப்பிக்கலாம் என மாவட்டஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்!**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 30.07.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் விதி எண்.110-ன் கீழ் ”சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளைஞர்களின் பணியை அங்கீகரிக்கும் வகையில், முதலமைச்சர் மாநில இளைஞர் விருது என்ற புதிய விருது உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள். 15 முதல் 35 வயது வரை உள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு ஆண்டுதோறும் சுதந்திர தினத்தன்று இவ்விருது வழங்கப்படும் என்றும், இந்த முதலமைச்சர் மாநில இளைஞர் விருது ரூ.50,000/- ரொக்கம் பாராட்டு பத்திரம் மற்றும் பதக்கத்தை உள்ளடக்கியதாக இருக்கும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி 2015-16ம் ஆண்டிற்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருது எதிர் வரும் 15.08.2016 அன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படவுள்ளது. இவ்விருது தொடர்பான கீழ்காணும் தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

1. 15 வயது முதல் 35 வயது வரையுள்ள ஆண்கள்/பெண்கள் ஆகியோர் விண்ணப்பிக்கலாம். கடந்த ஏப்ரல் 01-ந்தேதி அன்று 15 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும் அல்லது மார்ச் 31-ந்தேதி அன்று 35 வயதிற்குள்ளாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரார்கள் சமுதாய நலனுக்காக தொண்டாற்றியிருப்பவர்களாக இருத்தல் வேண்டும்.
3. அவ்வாறு அவர்கள் செய்த தொண்டு சமூக/சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.
4. அவர்கள் செய்த சேவையின் தாக்கம் தெளிவாக கண்டறியப்படக் கூடியதாகவும், அளப்பரியதாகவும் இருத்தல் வேண்டும்.
5. பள்ளி / கல்லூரி / பொதுத்துறை நிறுவனங்கள் / மத்திய / மாநில அரசுப் பணியில் உள்ளவர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவர்.
6. உள்ளூர் சமுதாய மக்களிடம் அவர்களுக்குள்ள மதிப்பினை இவ்விருதிற்கான பரிசீலனையில் கணக்கில் கொள்ளப்படும்.

மேற்காணும் முதலமைச்சர் மாநில இளைஞர் விருது பெற 15 முதல் 35 வயதிற்குட்பட்ட தகுதி வாய்ந்த இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இவ்விண்ணப்பபடிவங்களை மாவட்ட விளையாட்டரங்கம், தருமபுரியில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் www.sdat.tn.gov.in என்ற இனைணதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 20.06.2016க்குள் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், தருமபுரி அவர்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

எனவே தருமபுரி மாவட்டத்திலுள்ள தகுதி வாய்ந்த இளைஞர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.